இந்தி எதிர்ப்பு

★

அன்றும்-
இன்றும்

★

ஈழத்து அடிகள்

1965

விலை 0-50 காசு



முன்னுரை

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பைப் பற்றி, இன்றுள்ள இந்தி எதிர்ப்பாளர் பலருக்கு ஒன்றுமே தெரியாது.

இந்தியால் தமிழ் கெடும் என்று உணர்ந்த எனக்கு, இந்தக் கொடுமையை எதிர்த்தொழிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று.

நமது சொந்த மொழியான தமிழே இங்கு இன்னும் கட்டாய பாடமாகாத நிலையில், இன்னொரு அயல் மொழி கட்டாய பாடமானால், தமிழ் மொழியின் நிலை மேலும் சீரழிந்து சிதைந்து விடுமே என்ற அச்சமே என்னை இப் பணியில் ஈடுபடும்படி செய்தது.

தமிழ் நாட்டில் யாருக்கும் அறிமுகமில்லாத என்னால் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு, தமிழ் மக்களின் நல்லாதரவைப் பெற்று வெற்றியைத் தேடித்தந்தது.

இடையில், தந்நலக்காரர் சிலரும், இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டால், நாட்டில், தங்களுக்குச் செல்வாக்கும் புகழும் கிடைக்கும் என்று எண்ணிய பலரும் வந்து சேர்ந்த போதிலும், கொண்ட குறிக்கோள் தூய்மையானதாக இருந்ததால், அன்றைய இந்தி எதிர்ப்பு வெற்றியைப் பெற்றது.

எனவே, அன்றைய இந்தி எதிர்ப்பையும், இன்றைய இந்தி எதிர்ப்பையும் ஒப்புநோக்கிப் பார்க்கும் ஒரு நல்ல வாய்ப்பினை உண்டாக்கவும், அதனால், மக்கள் விழிப்படைந்து உண்மையை உணரவுமான ஒரு நல்ல நிலை ஏற்படவேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும், அன்றைய இந்தி எதிர்ப்பு எவ்வளவு தூய்மையானது—தந்நலமற்றது: இன்றைய இந்தி எதிர்ப்பு எவ்வளவு போலியானது—தந்நலம் நிரம்பியது என்பதனை உணர வேண்டும் என்பதற்காகவுமே இச்சிறு நூலைத் தமிழ்ப் பெருமக்களாகிய உங்கள் முன்வைக்கிறேன்.

வணக்கம்.

ஈழத்து அடிகள்

அணிந்துரைகள்

இந்தி பொது மொழியா? என்ற எனது நூலை, என்னுடைய உடன்பாட்டைப் பெறாமல், கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகள் ஆயிரக்கணக்கில் அச்சிட்டதுமன்றி, அதனை விலையின்றியும் வழங்கினார் என்பதனை அறிந்த நான் அவர்மீது நடவடிக்கை எடுப்பதாகக் கடிதம் எழுதினேன்.

இதனை அறிந்த எனது நண்பர்களான சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., உமாமகேசுவரன் பிள்ளை, பி. ஏ., பி. எல்., வெங்கடசாமி நாட்டார், போன்றவர் என்னையணுகி, ஈழத்துச் சிவானந்த அடிகள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டினை விளக்கிக் கூறிய பின்னர்தான், அடிகள் மேற்கொண்டுள்ள தூயதொண்டினை அறியும் வாய்ப்பு ஏற்பட்டதோடு, அவர்மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்த என் எண்ணத்தையும் கைவிட நேர்ந்தது.

மறைமலையடிகள்
13—6—'39.

பெரியார் இராமசாமி அவர்களின் தலையீடு இல்லையென்றால், கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட கட்டாய இந்தி எதிர்ப்பில் சிறை சென்றிருப்பேன்.

சோமசுந்தரபாரதி, எம்.ஏ., பி.எல்.,
17—6—'39.

ஈழத்துச் சிவானந்த அடிகள்

கருவூர்.

கட்டாய இந்தியை எதிர்த்து உண்ணுநோன்பிருப்பதற்காகத் தங்களால் அனுப்பப்பட்ட தோழர் ஸ்டாலின் செகதீசனுக்கு என்னுடைய வீட்டிலேயே எல்லா வசதிகளும் செய்து தந்து, அவருடைய நோக்கத்திற்கு இடையூறில்லாமல் பார்த்து வருகிறேன். மற்றும் தங்கள் கடிதம் பார்த்து ஆவன செய்கிறேன்.

அன்பன்,

தியாகராய நகர்,
2—5—'38.

C. D. நாயகம்,

✠

நடைபெற இருக்கும் இந்தி எதிர்ப்புப் போரில் சேர விரும்புவோர், தங்கள் முழு முகவரியோடுள்ள அட்டவணைகளைக் கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகளுக்கு அனுப்பிவைக்கவும்.

வள்ளல் சோ. சிவஞான தேசிகர்,
20—4—'38.

✠

"அன்று சைவத்தைக் காப்பாற்ற ஈழத்திலிருந்து ஒரு ஆறுமுக நாவலர் நமக்குக் கிடைத்தார். இன்று தமிழைக் காப்பாற்ற அதே ஈழத்திலிருந்து ஒரு அடிகள் நமக்குக் கிடைத்துள்ளார்".

உமாமகேசுவரன், பி.ஏ., பி.எல்.,
14—1—'38.

"ஈழத்துச்சிவானந்த அடிகள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டினைத் தமிழ் நாடு என்றைக்கும் மறக்காது"

வெங்கடசாமி (நாட்டார்,)
21—4—'40.

"இந்தி கட்டாயமாவதால் தமிழ் மொழி வளர்ச்சி கெடும் என்று உண்மையாகவே நம்பி, அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர் ஈழத்துச் சிவானந்த அடிகள்"

நாரணதுரைக்கண்ணன்,
(பிரசண்ட விகடன்)
1—3—'40.

"இந்தி எதிர்ப்பின் தலைவர் தாங்கள்தான் என்பதால் தங்களின் கட்டளையைத் தமிழ்நாடு ஏற்று நடக்கக் காத்திருக்கிறது"

அருணகிரி அடிகள்
2—3—'38

"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்குத் தாங்கள்தான் முதன்மையானவர் என்பதைத் தமிழ்நாடு உணர்ந்து கொண்டது"

சண்முகானந்த அடிகள்
31—3—'38.

1938–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பைப் பற்றிக், கட்டாய இந்தியைக் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்த முதல் அமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள்:-

> "யாரோ விலாசம் தெரியாதவர்களால் ஆரம்பிக்கப் பட்ட இந்த இந்தி எதிர்ப்புத் தானகவே பிசுபிசுத்து விடுமென்று எண்ணினேன். ஆனல், இப்போது பார்த்தால், புற்றில் இருந்து ஈசல்கள் கிளம்புவது போல் இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் வந்து கொண்டிருக்கிருர்களே!"

என்று மிரண்ட நிலையில் நின்று கூறியுள்ளார்.

அறிமுகம்

ஈழத்து அடிகள் யார்?

உண்மையில் இந்தக் கேள்வியைக் கேட்கவே கூடாது. ஆனால், இன்றைய பொதுப்பணிப் போர்வையில், பெரும் பாலுஞ் சின்னஞ்சிறு அப்பாவிகள் பெருமளவு ஈடுபாடு கொண்டிருந்தாலும், அவர்களைத் தங்கலத்திற்குப் பயன் படுத்தும் 'தலைவர்.' உண்மைகளை மூடி மறைத்து 'எல்லாம் நான்தான்' என்று போலி மதிப்பைத் தேடிக்கொள்ளும் போக்கிலிருப்பதால், நண்பர் அவர்களைப் பற்றிச் சில சொற்கள் கூற விரும்புகிறோம்.

இன்று — பொதுப்பணியில் ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈடுபட்டதன் வாயிலாகக், கடன் காரராகத்—தொல்லைகளும் துன்பங்களும் நுகர்பவராகக் காட்சியளிக்கிறார் அடிகள்.

அவர் பதவியை நாடியதில்லை! அவர் 'மாலை' களைத் தேடியதில்லை; கைத்தறித் துண்டுகளைக் காசாக்கியதில்லை! சேரக்கூடாத பிற்போக்குக் கும்பலுடன் கூடிக்கொண்டு செய்யக்கூடாத செயல்களைச் செய்தவருமல்ல

பேச்சு வெறும் பிழைப்பு என்றோ, எழுத்து வெறும் பணம் ஈட்டும் துறை என்றோ அவர் எண்ணியதில்லை.

எங்கோபிறந்து, எப்படியோ வளர்ந்து, தரக்குறைவான— தகாத செய்கைகளின் வாயிலாக இன்று அரசியலில் ஆட்டம் போடுபவர்கள், இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு இருந்த நிலையை, இன்று அவர்கள் உள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நண்பர் அடிகள் உண்மையில் தன் வாழ்நாட் களைப் பிறருக்காகவே பயன்படுத்தி வந்த, உத்தமர் என்று நிறைமதி படைத்த எவரும் அறியலாம்.

அன்று—அடிகள் கட்டாய இந்தியை எதிர்த்துத் தனி ஒருவராகப் போர்க்குரல் எழுப்பியிராவிட்டால், இன்று போலி மதிப்புடனும், நிலையற்ற தற்காலிகச் செல்வாக் குடனும் வாழும் பலர் எடுபிடிகளாகவோ, ஏவலர் களாகவோ திண்டாட வேண்டியிருந்திருக்கும் என்றாலும், அது தவறாகாது.

அன்று—அடிகள் இந்திக்கு எதிராகத் தொடுத்தபோர் உண்மையானது. இன உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது. வெற்றியுடனும் முடிந்தது.

இன்று—இந்திக்கு எதிராக நடத்தப்படும் நாடகம், ஒருசாராரின் பிழைப்புக்கும், ஒரு கும்பலுக்கிடையே வளர்ந்துள்ள பூசல்களையும் பிளவுகளையும் சரிக்கட்டவுமே பயன் படுகிறது.

தூய்மையான அறப்போராட்ட மக்களாட்சி முறையை, வெறுங் கண்கட்டு வித்தையாகப் பயன்படுத்தும் கோழைகளுக்குத் 'தென்னாட்டு காந்தி'யாக வேண்டு மென்ற ஆசை வளர்ந்திருக்கிறது.

'மலருக்கும் உயிருண்டு—பறிக்காதீர்' என்று கூறினார் அண்ணல் காந்தியடிகள். ஆனால், கசாப்புக் கடையிலும், மீன் கடையிலும் எதையும் விடாமல் 'ஓசி'யில் பெற்று உடல் வளர்ப்பவர்;

நல்லவர்களை நாத்துடுக்குடன் பேசி, உத்தமர்களை வாயாரத்தாக்கி, உடன் உழைத்தவர்களைச் சாகடித்துத், தீய கும்பலுடன் கொஞ்சிக்குலவிடும் இந்தக்'கொள்ளைக்காரரை' அந்த உத்தமத் தலைவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பது வேதனை யிலும் வேதனையே.

கால் நூற்றாண்டுக்கு மேலாக—இரவு பகலாகப் பாடு பட்டுப், பிறரின் வளர்ச்சிக்காகத் தன்னையே ஒப்படைத் தவர் அடிகள்.

பகுத்தறிவையூட்டும் கட்டுரைகள், மூடநம்பிக் கைகளை முறியடிக்கும் எழுத்தோவியங்கள் — ஆராய்ச்சி நூல்கள், நல்ல நீதிகளைப் புகட்டும் கதைகள்;

எத்தனையோ எழுதினார்; ஆனால் அவைகளை விற்றுச் சொத்துச் சேர்த்துக் கொண்டவர்கள் எந்தக் கொள்கை களையும் உறுதியாகக் கடைப்பிடிக்கவில்லை.

பல ஆண்டுகள், மக்களிடையே, வயிறுவலிக்க மணிக்கணக்காகப் பேசப்பட்ட நல்ல முற்போக்கு—முன்னேற்றக் கொள்கைகளை-அவற்றைக் கூறியவர்களே சாக்காட்டுக்குக் கொண்டுபோய் விட்டனர்.

தென்னாட்டு மக்களிடையே இன்று புதிய திருப்பம் தேவைப்படுகிறது.

அடிகள் எழுதியுள்ள, 'இந்தி எதிர்ப்பு அன்றும் இன்றும்' அந்த நல்ல திருப்பத்திற்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் இதனை வெளியிடுகிறோம்.

'யார் இந்த அடிகள்?' என்று தோழர் அண்ணாத்துரையை அறியாதவர்கள், இரகசியமாக இருக்குமிடம் தெரியாமல் ஆக்கப்பட்ட பழைய 'திராவிடநாடு' கிழமை இதழை அறியாதவர்கள்;

இன்று, 'காஞ்சி' யோடு தடுமாறுபவர்கள் கேட்கலாம்.

அன்று:—

அடிகள் இல்லாமல் இந்தி எதிர்ப்பு இல்லை—பலருக்குப் பிழைப்பு இல்லை-சிலருக்கு செல்வமும் செல்வாக்கும் இல்லை!

இன்று தோழர் அண்ணாத்துரை அவர்களின் தந்நலமே உருவெடுத்தாற் போன்ற ஆகாத போக்கின் காரணமாக, அவரால் மேற்கொள்ளப்பட்ட இந்தி எதிர்ப்பு வெற்றிபெற முடியாது போயிற்றென்பதை எண்ணிப்பார்க்க, அடிகள் எழுதியுள்ள, 'இந்தி எதிர்ப்பு அன்றும் இன்றும்' பெரிதும் பயன்படுமென்று நம்பிக்கையுடன் வெளியிடுகிறோம்.

ஆசிரியர்

'தென்றல் திரை'

இந்தி எதிர்ப்பின் பிறப்பு

ஆச்சாரியார் அவர்கள் 1938-ல் இந்தியைக் கட்டாய பாடமாக்குவேன் என்று அறிவித்தபோது, அதனை எதிர்த்து ஆச்சாரியாருக்கு முதல் தந்தி அடித்தவர் ஈழத்துச் சிவானந்த அடிகளே ஆவார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அவர்தான் துவக்கினார். பிறகுதான் நாவலர் பாரதியார், பெரியார் இராமசாமி, அண்ணாத்துரை போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். ஈழத்துச் சிவானந்த அடிகள் இந்தி எதிர்ப்பின் சர்வாதிகாரி (தனி ஆணையாளர்) யாகப் பணியாற்றிச் சிறை புகுந்தார்.

இரா. நெடுஞ்செழியன்,

எம் ஏ., எம்.எல்.ஏ.,

நீதிக்கட்சி

1937–லும், அதற்கு முன்னரும், தமிழ்நாட்டில், விடுதலை இயக்கமான காங்கிரசுக் கட்சியைத் தவிர, வேறு எந்த விதமான அரசியல் கட்சிகளும் இருந்ததில்லை.

ஆனால் நீதிக்கட்சி (Justice Party) என்ற ஒரு அமைப்பு இயங்கி வந்தது. என்ற போதிலும், அதற்கும் பொதுமக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் உண்டாகவில்லை. அந்த அமைப்பில் இருந்த அனைவருமே பெரும் மிட்டாமிராசுகளாகவும், பெருந்தனக்காரர்களாகவுமே இருந்தனர். அதனால், அவர்கள், பட்டம் பதவிகளைப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து அமைதி பெற்றனர்.

இதைத் தவிர, அரசியல் கலப்புச் சிறிதுமற்ற தன்மான இயக்கம் (Self Respect Movement) என்ற ஒரு அமைப்பும் அப்போது தமிழ்நாட்டில் இருந்தது. இதன் நோக்கம், புரோகித மறுப்பு, கோயில் வழிபாட்டால் ஏற்படும் காலக்கேடு, பொருளழிவு, மனிதருள்ளும் ஒருவன் உயர்ந்தவன், இன்னொருவன் தாழ்ந்தவன் என்று கூறிக் கொள்வதால் உண்டாகும் கொடுமைகளும் கெடுதல்களும் என்ற இவைகளை விளக்கித் தமிழ்நாட்டில் பேச்சாலும் எழுத்தாலும் பணியாற்றி வந்தது.

இந்த அமைப்புக்கும், ஊருக்கு நான்கைந்து பேர் என்ற அளவில்தான் ஆதரவு இருந்து வந்தது.

ஆச்சாரியாரின் சதித்திட்டம்

1937 வரை விடுதலை இயக்கமாக விளங்கி வந்த காங்கிரசுக்கட்சி, ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் தேர்தலில் நிற்பதென்று முடிவு செய்தது.

அதன்படி தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடங்கப் பெற்றன. தமிழ்நாட்டில், திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்களும் ஏனைய காங்கிரசுக்காரர்களும் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டனர்.

தமிழ் நாட்டில் காங்கிரசுக்குப் பெரும் பான்மையான இடங்கள் கிடைத்தன.

முதல் அமைச்சராக திரு. ஆச்சாரியார் அவர்கள் ஆக்கப்பட்டால், அவர், தமது முதல் வேலையாகத் தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் இந்தி மொழியைக் கட்டாயபாடமாக்குவதாகக் கூறிவந்தார்கள்.

அப்போது, நான் கருவூரிலுள்ள ஒரு அன்னக் காவடி மடத்தில் இருந்துவந்தேன். தமிழ் மொழிக்கு என்னாலான தொண்டினைச் செய்வது தான் எனது குறிக்கோளாக இருந்தது.

தமிழ் நாட்டில் இந்தி மொழி கட்டாயபாட மாக்கப்படும்; அதுவே ஆச்சாரியார் அவர்களின் முதற்பணியாக இருக்கிறது என்ற செய்தியைச் செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்த நான், 12—2—37-ல்,

> "தமிழ் நாட்டில் இப்போது சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. அதற்கு நண்பர்கள் பலர் உங்களை நாடி வாக்குரிமை (ஓட்) கேட்க வருவார்கள். அப்போது நீங்கள் அவர்களிடம், ஐயா, நீங்கள் உங்கள் மொழியாகிய தமிழை ஆதரிக்கவேண்டும். சட்டமன்றங்களிலும். பிற இடங்களிலும் தமிழ் மொழியிலேயே அலுவல்கள் நடை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தமிழ் நாட்டில் இந்தி போன்ற வேற்று மொழிகளைக் கட்டாயபாட மாக்கு தல் கூடாது என்பதை ஒப்புக் கொள்ளுங் கள். இங்ஙனம் உறுதி கூறுவீர்களானல். எங்களுடைய வாக்குரிமையைப் பெறலாம் என்று கூறித் தமிழ் மொழியும், தமிழ் மக்களும் முன்னேற்றம் அடையும் வழியைத் தேடுங்கள். இதுவே தமிழ் மக்களாகிய உங்கள் கடமை"

என்ற ஓர் அறிக்கையை, **'உங்கள் கடமை'** என்ற தலைப்பில் வெளியிட்டு, அதனைத் தமிழ் நாடெங்கணும் அனுப்பி வைத்தேன். அன்று முதல், இந்தி எதிர்ப்புப் பணியிலேயே எனது முழுநேரத்தையும் செலவிட்டு வந்தேன்.

தனி ஒருவனாக, அன்னக்காவடி மடத்தார் அளிக்கும் பிச்சை உணவை உண்டு கொண்டு, தமிழுக்காக அயராது பணியாற்றி வந்தேன்.

அறிக்கைகள் தயார்

தமிழ் நாட்டில் யாருக்கும் அறிமுகமில்லாத என்னால் தொடங்கப்பெற்ற இந்தப் பணிக்கு நாளாவட்டத்தில் நல்ல ஆதரவு கிடைத்துவந்தது.

இந்த நேரத்தில்தான் பல்லாவரம் பொது நிலைக் கழக ஆசிரியர் உயர்திரு மறைமலை அடிகளார் "இந்தி பொதுமொழியா?" என்ற நூலை வெளியிட்டிருந்தார்கள். அந்த நூலைப்பார்த்ததும் அதனை அச்சிட்டுத் தமிழ் நாடெங்கணும் அனுப்ப வேண்டுமென்ற விருப்பம் உண்டாகவே, திரு. கோ. து. நாயுடு, (G. D. Naidu) பாகநேரிக் காசி விசுவநாதன் செட்டியார், ஆகிய இருவரின் பண உதவியினால் 15,000 படிகள் அச்சிட்டுத் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் இலவசமாகவே அனுப்பி வைத்தேன்.

பிறகு, நாவலர் சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி. எல்., அவர்கள் 'இந்தி கட்டாய பாடமா' என்ற ஒரு நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார்கள். அதனையும் தமிழில் மொழி பெயர்த்து 15,000 படிகள் அச்சிட்டுத் தமிழ்நாடு முழுவதும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

இவையன்றி, இந்தி எதிர்ப்புப் பற்றிய பல அறிக்கைகள் அச்சிடப்பெற்றுத் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் அனுப்பப்பட்டன.

கருவூரிலும், அதனை அடுத்துள்ள சிற்றூர்களிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் என்னுடைய பணியை வரவேற்று ஊக்கமளித்துப் பொருளுதவியும் புரிந்து வந்தனர்.

இந்த நிலையில், சென்னையில் இருந்த துறவிகளான **அருணகிரி அடிகளும், சண்முகானந்த அடிகளும்** எனக்குப் பெருந்துணையாக நின்று இந்தி எதிர்ப்பில் முழுப் பங்கெடுத்துப் பெரும் பணி புரியலாயினர்.

இந்த நேரத்தில்தான் காங்கிரசுக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று ஆளும் பொறுப்பை ஏற்றுப் பணி புரியத் தொடங்கிற்று.

ஆச்சாரியாரின் அடக்குமுறை

திரு. ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சரானர் முன்பு தெரிவித்தபடியே, தம்முடைய முதல் வேலையாகத் தமிழ் நாட்டிலுள்ள 60 உயர்நிலைப்பள்ளிக் கூடங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்குந்திட்டத்தை வெளியிட்டார்.

இதனை அறிந்த நான், உடனே 'இந்தி எதிர்ப்பு மறியல் நடத்தியாக வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, ஓர் அறிக்கையைக் கீழ்தந்துள்ளபடி எழுதி, அதனை எடுத்துக்கொண்டு ஈரோட்டிலுள்ள விடுதலை, அலுவலகம் சென்றேன்.

இந்தி எதிர்ப்பின் இறுதிப்போர்

தமிழ் பெருமக்களே!

இந்திக் கட்டாயக் கல்வியினால் தமிழ் மக்களின் மொழி-கலை நாகரிகம் முதலியன வளர்ச்சி குன்றிச்-சீர்குலைந்து-மறைந்து விடுமெனவும், அதனால் தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றம் தடைப்படுமெனவும், ஆகவே அந்நிய மொழியாகிய இந்தியைத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களிடம் கட்டாய முறையில் நுழைப்பது சனநாயக ஆட்சியிலுள்ள அதிகார வர்க்கத்தாருக்கு அடாதெனவும் எத்தனையோ நூற்றுக்கணக்கான வேண்டுகோள்களும், கண்டனத் தீர்மானங்களும், மன்றாட்டக் கடிதங்களும் அனுப்பியும், அவை எல்லாவற்றையும் ஒரு சிறிதும் மதியாது, இந்தி எதிர்ப்புக்காரர்களையெல்லாம் "அறிவிலிகள்" என்று வாய்கூசாது கூறியதுமன்றிச், சென்னை முதன் மந்திரியார் தமக்கிருக்கும் அதிகார இறுமாப்பினால் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்கள் அறுபதில் இந்தியைக் கட்டாய பாடமாக்கும் அறிக்கையைத் துணிந்து வெளியிட்டுவிட்டார். "நான் செய்வதைத் தடுப்பது யார்" என்ற ஆணவத்தோடு கூடிய முதன் மந்திரியாரின் இக்கொடுஞ் செயலைப் பார்த்துக்கொண்டு தமிழ்க் குருதி தன் உடம்பில் ஓடும் எந்தத் தமிழ் மகனும் இனிவாளா இருத்தல் முடியாது

இனி, இந்தி எதிர்ப்புக்காக மாநாடுகள் கூட்டிப் பேசுவதினாலோ, அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்புவதினாலோ எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்ற முடிவுக்குத் தமிழ்த் தலைவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள்.

ஆகவே, இனி நமது எதிர்ப்பைச் செயலளவிற் செய்து காட்டினாலொழியத், தமிழ் மொழியைப் பாதுகாக்கவும், தமிழ் மக்களின் அடிமை வாழ்க்கையை ஒழிக்கவும் முடியாதென்பது உறுதியாய்விட்டது. ஆகவே, நாம் இறுதியாகச் செய்து பார்க்கும்

அறப்போர் முனையில் தமிழ் மக்கள் எல்லாரும் ஒன்றுபட்டு இறங்கவேண்டும். மேற்படி அறப்போரும் சென்னையில் முதல் மந்திரி இல்லத்திலும், சட்டசபை வாயிலிலும் நின்று செய்யப் பட்டால்தான் வெற்றி கிடைக்குமென்பதும் தமிழ்த் தலைவர்களின் முடிவான நம்பிக்கையாகும். அறப்போரை இந்தி கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் செய்வதினால் அதிக பயன் விளையாதென்றும், எதிர்ப்பின் கிளர்ச்சி அரசாங்கத்தாருக்கு விரைவில் எட்டா தென்றும், அப்படி எட்டினாலும் தமிழ் மக்களை அடியோடு கவிழ்க்கக் கங்கணங்கட்டிப் பாடுபடும் சில பத்திரிகைக்காரரின் உண்மைக்கு மாறான விளம்பரங்களினால் அரசாங்கத்தார் நேரான உண்மையை அறியமுடியாது போகுமென்றும் தமிழ்த் தலைவர்கள் கருதுவதால மேற்படி அறப்போரைச் சென்னையிலே நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, அறப்போருக்கு வருவதாக இதுவரை 200 தொண்டர்களுக்குமேல் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆனால், மேற்படி தொண்டர்களுள் பெரும்பாலாருக்கு உண்மையான உணர்ச்சியும் ஆர்வமும், இருக்கிறதே ஒழிய, அவர்களிடம் போதிய பொருள் வசதியில்லாததால் தங்களுடைய உணர்ச்சியைச் செயலளவில் செய்துகாட்ட முடியாத நிலைமையில் நின்று தவிக் கிறார்கள். இத்தீவினையை ஒழித்துத் தமிழ் மக்களின் மானத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இது சமயம் பொருட் செல்வம் மிக்கத் தமிழ் மக்களிடமும், தமிழர் நலங்கருதி உழைக்கும் சங்கங்களின் தலைவர் களிடமுமே தங்கியிருக்கிறது. ஆகவே, பொருள் வளம் நிறைந்த தமிழ்ப் பெருமக்களும், சங்கங்களின் தலைவர்களும் முன்வந்து தக்க பொருள் தந்து உதவவேண்டும்.

அறப்போர் 1—6—1938ல் துவங்குவதாக முடிவு செய்யப் பட்டிருப்பதால், எல்லா விதமான ஏற்பாடுகளும் 25-5-1938-க்குள் முடிவாகித் தொண்டர்கள் எல்லாரும் 1—6—'38ல் சென்னையில் இருக்கவேண்டுமாகையால், அன்பர்கள் எல்லாரும் மிக விரைந்து பொருளுதவியைச் செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பு:— சிறிதளவாவது பொருள் வசதியுள்ள தொண்டர்கள் பிறருடைய உதவியை எதிர்பாராமல் தங்களுடைய சொந்தச் செலவிலேயே மேற்படி தொண்டைச் செய்ய முன்வர வேணுமாய்க் கேட்டுக் கொள்வதோடு, அறப்போர் கண்டிப்பாக 1—6—'38-ல் துவங்க வேண்டுமென்பதைத் தொண்டர்களும் பொருள் உதவும் அன்பர்களும் கவனித்து ஆவன விரைந்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈழத்துச் சிவானந்த அடிகள்,
அறிவுதயக் கழகம்,
25–4–38 கருவூர்.

*அங்கே **பெரியார் இராமசாமி** அவர்களிடம் இந்த அறிக்கையைக் காட்டி, இதனை, 'விடுதலை' 'குடிஅரசு' ஆகிய இதழ்களில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக் கொண்டேன். இந்த அறிக்கையைப் பார்த்துவிட்டு, "இது காங்கிரசார் கையாளும் சண்டித்தனம்; சத்தியாக்கிரகம் மறியல் என்பதெல்லாம் வெறுங் கேலிக்கூத்து" என்றுகூறி அந்த அறிக்கையை வெளியிட மறுத்து விட்டார்.*

*பிறகு, ஈரோட்டிலுள்ள எனது நண்பர் **சண்முக வேலாயுதம்** அவர்களிடம் சென்று நிலைமையை விளக்கிக் கூறினேன். அவர் அந்த அறிக்கையைத் தம்முடைய செலவில் அச்சிடுவித்துத்தருவதாகக்கூறி, அந்தஊரிலுள்ள* **ஐக்கிய** *அச்சகத்தில் அச்சிடுவித்துத் தந்ததோடு, அதனைத் தமிழ்நாடெங்கணும் அனுப்பும் அஞ்சல்*

(Stamp) செலவையும் திரு. சண்முக வேலாயுதம் அவர்களே ஏற்றுக்கொண்டு பேருதவிபுரிந்து, நான் மேற்கொண்ட பணிக்கு ஊக்கமும் உற்சாக மும் அளித்தார்கள்

மறியல் துவங்கியது

சென்னையிலுள்ள முதலமைச்சர் (ஆச்சாரி யார்) இல்லத்தின் முன் 1—6—38-லிருந்து மறி யல் தொடங்கப்பெறும் என்ற எனது அறிக் கையை வெளியிட்ட பின்னர், நான் சென்னை சென்று, மறைந்த பெரியார் சி. டி. நாயகம் அவர் களைக் கண்டு எனது நோக்கத்தையும் நிலைமை யையும் விளக்கினேன்.

அவருடைய உதவியால், அவருக்குச் சொந்த மான ஓர் இடத்தில் – முதலமைச்சர் இல்லத்துக்கு அருகாமையில் இந்தி எதிர்ப்பு நிலையத்தை நிறுவி, அறப்போர் வீரர்களின் வருகையை நோக்கி, நானும் அருணகிரி அடிகளும், சண்முகானந்த அடிகளும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தோம்.

இந்தி எதிர்ப்பு மறியல் 1—6—38-ல் தொடங் கப்பெறும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்த போதிலும், தமிழ் மொழியினிடத்து நீங்காப் பற்றுக் கொண்டிருந்த தமிழ் வீரர்கள் 120 பேருக்கு மேற்பட்டவர்கள்–குறிப்பாக விருதுநகர் அருப்புக்கோட்டைப் பகுதிகளில் இருந்து

25—5—38-ல் இருந்தே தங்கள் சொந்தச் செலவில் சென்னையில் வந்து குழுமத் தொடங்கி விட்டார்கள்.

இந்தி எதிர்ப்பு மறியல், குறிப்பிட்டபடி 1—6—38 அன்றே தொடங்கப் பெற்று, முதலமைச்சர் இல்லத்தின் முன் நடைபெறுவதாயிற்று. இந்தி எதிர்ப்பு வீரர்களும் நாளுக்குநாள் அதிக அளவில் வரத் தொடங்கினார்கள்.

மறியல் தொடங்கிய மூன்றாம்நாள், அதாவது 60 பேர்வரை மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்ற பின், பெரியார் **ஈ. வே. இராமசாமி** அவர்கள் தாமாகவே இந்தி எதிர்ப்பு நிலையத்துக்கு வந்து, மறியல் செய்வதற்காக வந்திருந்த தொண்டர்களை நோக்கி, "இப்படி மறியல் செய்வது காங்கிரசார் மேற்கொள்ளும் பயன்தராத முறையாகும்—சண்டித்தனமாகும். இதில் நீங்கள் ஈடுபட வேண்டியதில்லை" என்ற பழைய பல்லவியை மீண்டும் கூறியதோடு, வந்தவர்கள் தங்கள் தங்கள் ஊருக்குப் போவதற்கு வழிச்செலவும் தருவதாகக் கூறினார்.

அந்தச் சமயத்தில், நானும் அங்கிருந்த மற்றவர்களும் அவரை அணுகி, "ஐயா, இதில் நீங்கள் தலையிடாமல் இருப்பது, தமிழ் மொழியைக் காப்பாற்றச் செய்யும் ஒரு பேருதவியாகும்" என்று கூறவே, அவரும் மறுமொழி ஒன்றும் கூறாமல், திரு. சி. டி. நாயகம் அவர்கள் இல்லத்திற்குச் சென்று விட்டார்.

பிறகு, அங்கு நிலைமையைத் திரு. சி. டி. நாயகம் அவர்கள் விளக்கிக் கூறவே, உண்மையைப் புரிந்து கொண்டு, தானும் இந்தி எதிர்ப்பில் கலந்து கொள்ளும் முறையில் காரியங்களை நடத்தத் தொடங்கினார். பெரியார் இராமசாமி அவர்களிடம் செய்தித்தாள்கள் (விடுதலை—குடியரசு) இருந்ததால், இந்தி எதிர்ப்பை நாடறியச் செய்ய ஒரு நல்ல வாய்ப்புக்கிட்டியிருப்பதாகக் கருதிப் பெருமகிழ்வடைந்தோம்.

பேச்சாளர்களுக்கு மேடை கிடைத்தது

இந்தி எதிர்ப்பு மறியல் நடந்துகொண்டிருக்கும்போதே, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களும், மாநாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளை, திருவாளர்கள் கி. ஆ. பெ. விசுவநாதன், சி. என். அண்ணாத்துரை போன்றவர்கள் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கலந்து கொண்டு, இந்தியை எதிர்ப்பதன் நோக்கத்தை விளக்கிப் பேசி வந்தார்கள்.

மேடைகளில் பேசும் தகுதிபெற்ற சிலருக்கு இந்தி எதிர்ப்பு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது.

அந்த வாய்ப்பு, அவர்களிற் சிலருக்கு—அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வுக்கு வித்தூன்றியது போல் ஆகிவிட்டதென்பது மிகைபடக்கூறுவதாகாது.

மாதச் சம்பளத்துக்கு எங்கோ ஒரு அலுவலகத்தில்—செய்த்தாள் துறையிலோ, அல்லது சிற்றரசர்களின் மாளிகையிலோ பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டிய சிலருக்குப், பொதுவாழ்வில் நல்லஇடமும், தலைமைப்பதவியும், அவர்களே ஆச்சரியப்படக்கூடிய அளவுக்குச் செல்வமும் (பணமும்) கிடைத்திருக்கிறதென்றால், அது, என்றால் தோடங்கப் பெற்ற இந்தி எதிர்ப்பின் விளைவேயாகும்.

பெண்குலத்தின் போர்க்கோலம்

இந்தி எதிர்ப்பு மறியல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழ் நாட்டிலுள்ள தாய்மார்களும் தங்கள் பங்கினைச் செய்ய முன் வந்தார்கள்.

நூற்றுக்கு மேற்பட்ட பெண்மணிகள், தங்கள் பால்மணம் மாருப் பச்சிளங் குழந்தைகளுடன் இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ளார்கள்.

ஆண்டு பலவான மூதாட்டிகளான டாக்டர் **தருமாம்பாள்** *அவர்களும், மூவாலூர்* **இராமாமிர்தத் தம்மையார்** *அவர்களும், சென்னை* **மலர்முகத் தம்மையார்** *அவர்களும், வேறுபலரும்.*

ஆண்டு சிலவான சரசுவதி (டாக்டர் சிற்சபை அவர்களின் துணைவி) அவர்களும், கந்தம் உரோசம்மாள், சரோசினி அம்மாள் (மறைமலையடிகளாரின் மூத்த மருமகள்—மாணிக்கவாசகத்தின் துணைவி) கோபிசெட்டிபாளையம் மாரியமமாள் அவர்களும், வேறுபலருமாக 105 பேர் இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டுத் தமிழ்மொழிக்கும், தாய்க்குலத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்கள்.

செயல் இங்கே-புகழ் அங்கே!

இந்த நிலையில், இந்தி எதிர்ப்பைத் தோற்றுவித்த நானும் மற்ற இருதுறவிகளான அருணகிரி அடிகளும் சண்முகானந்த அடிகளும் சிறை சென்று விடவே, படிப்படியாக இந்தி எதிர்ப்பு அறப்போரைப் பெரியார் இராமசாமி அவர்களே ஏற்று நடத்தும் நிலை உருவாகியது. எல்லாம் அவருடைய விருப்பப்படி நடைபெற்றுவந்தது.

இதன் விளைவு, பிறகு, இந்தி எதிர்ப்புக்குப் பெரியார் இராமசாமி அவர்கள்தான் முதல்வர் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

இதுஒரு பெரிய பித்தலாட்டமும் கொடுமையுமாகும்.

வரலாற்றுண்மை வாய்ந்ததும், தந்நல மற்றதுமான இந்தி எதிர்ப்பு நிகழ்ச்சி, பெரியார் இராமசாமி அவர்களின் தலையீட்டால்—கறையான் புற்றெடுக்கப் பாம்புகுடி கொண்ட கதையாகி விட்டது.

செயலுக்கு ஒருவனும், அந்தச் செயலால் புகழ்பெற இன்னொருவனும் என்றநிலை ஏற்படுவதென்றால், அது, தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் உண்டாக்கப்படும் ஒரு மறைக்க முடியாத களங்கமாகும்.

துறவிக்குத் திரைபோட்ட மேதாவிகள்

1937-ல் என்றால் தொடங்கப்பெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கம்தான் தமிழ்நாட்டில் நல்லதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கிக் காங்கிரசுக்கு எதிராக ஒரு அரசியல் கட்சி உருவாகி வளர்ந்து வேரூன்றி நிற்பதற்கு வழிகோலியது என்பது மிகைபடக் கூறுவதாகாது.

திராவிட கழகம், அதன்பிறகு திராவிட முன்னேற்றக்கழகம் தமிழ்நாட்டில தோன்றி இயங்கி வருகின்றன என்றால், அது, 1937-ல் என்றால் தோற்றுவிக்கப்பட்ட இந்தி எதிர்ப்பின் பலனே என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமானால், திராவிட கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றிற்குப் பொதுமேடை கிடைத்ததும், அவர்களுடைய அரசியல் வாழ்வுக்கு அடிக்கல் நாட்டியதும் 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கம்தான். இந்தப் பேருண்மையினை அவர்களாலேயே மறுக்க முடியாது. வேண்டுமானால், அவர்களுக்கு இப்போது

ஏற்பட்டிருக்கும் இரவல் செல்வாக்கினால் மறைக்க முயலலாம். என்றாலும், வரலாற்றுண்மை வாய்ந்த ஒரு நிகழ்ச்சியினை என்றைக்கும் மறைத்துவைக்க எவராலும் முடியாது.

அன்று—இந்தி எதிர்ப்பு நடைபெறவில்லை என்றால்,

இன்று—திராவிட கழகத்திலும், திராவிட முன்னேற்றக்கழகத்திலும் பெருந்தலைவர்களாகக் காட்சியளிப்பவர்கள் எல்லாரும், அன்றியங்கி வந்த தன்மான இயக்க (Self Respect Movement) த்தோடு முகவரி தெரியாமல் இருந்திருப்பார்கள் என்பதும், அல்லது, அவர்களின் அன்றைய அரசியல் கட்சியான நீதிக்கட்சி (Justice Party) போல் இருக்குமிடம் தெரியாமல் போயிருப் பார்கள் என்பதும் கல்மேல் எழுத்துப்போன்ற உண்மையாகும்.

ஆனால், இந்த உண்மையை இன்று எத்தனை பேர் நினைவில் வைத்திருக்கிறார்கள் என்று எண்ணினால் ஏமாற்றமே தரும்.

பழைய உண்மைகள் முழுவதையும் இன்று அவர்கள் (தி. க; தி. மு. க.) அறவே மறந்து விட்டிருக்கிறார்கள்.

தெருவிலே திரிந்த ஒரு துறவியால் தோற்று விக்கப்பட்டதுதான் இந்த இந்தி எதிர்ப்பு இயக்கம் என்று கூறினால், அது, அவர்களுக்கு—இழுக் கென்று கருதுகிறார்கள் போலும்!

எவ்வளவோ படித்த மேதாவிகளாகிய நாங்கள் இருக்க, எங்கோ ஈழநாட்டிலிருந்து வந்த ஒரு அன்னக்காவடியா இப்படி ஒரு பெரிய இயக்கத்தை உண்டாக்கி நடத்திப் புகழ்பெறுவது என்ற 'நல்லெண்ணம்' போலும்!!

ஆனால், உண்மையை நல்ல உள்ளம் படைத்தவர்கள் மறைக்கமாட்டார்கள்.

திருச்சியில்—1937-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றிய தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்கள் இந்த உண்மையினைத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறினார்கள்.

> "அன்று சைவத்தைக் காப்பாற்ற ஈழநாட்டிலிருந்து ஒரு ஆறுமுக நாவலர் நமக்குக் கிடைத்தார். இன்று தமிழ் மொழியைக் காப்பற்ற அதே ஈழநாட்டிலிருந்து ஒரு அடிகள் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்பதை எண்ணும்போது, நாம் மகிழ்ச்சி அடைகிறோம், என்றாலும் உண்மையிலேயே நாங்கள் எல்லாரும் வெட்கப்படுகிறோம்."

என்று கூறினார்கள்.

புகழ் தேடிகள்

எனக்குப் புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காகவோ, அல்லது என்னைப் பலரும் பாராட்டிப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவோ நான் இந்தி எதிர்ப்பை நடத்தவில்லை.

கட்டாய இந்தியால் தமிழன் வளர்ச்சியும், தமிழ்மக்களின் முன்னேற்றமும் கெடும் என்பதை உண்மையாகவே உணர்ந்த நான், அந்தப் பெருங் கேட்டினை ஒழித்தாக வேண்டுமென்ற பொது நோக்கோடு—எந்தவிதமான பயனையும் எதிர் பாராத வகையில் போராட்டத்தை நடத்தினேன்—வெற்றியும் பெற்றேன்.

என்னுடைய இந்தத் தூய்மையான போராட்டத்தினால்,

கட்டாய இந்தி ஒழிக்கப்பட்டு, விருப்பபாடமாக ஆக்கப்பட்டது.

ஒரு நாட்டு மொழிக்கும்; அம்மொழி பேசும் மக்களுக்கும் இடையூறு உண்டாகாத வகையில், விரும்புபவர்கள் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்கலாம் என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல, நல்லறிஞர் பலரும் இச் சிறந்த கருத்தினை வரவேற்கிறார்கள் என்பது ஒரு தலை.

புகழ்கிடைக்க வேண்டும், அரசியலில் செல்வாக்குப் பெறவேண்டும் என்ற தந்நலத்தோடு ஒரு போராட்டத்தை நடத்தினால், அந்தப் போராட்டம் வெற்றியைத் தேடித்தராது. தோல்வியையே அணைத்துக் கொள்ளும்.

இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகநடைபெறுவது தான் இன்றைய இந்தி எதிர்ப்புப் போராட்டம்.

போகட்டும், அந்தப் பெருமையும் புகழும் எனக்கு வேண்டாம். இதற்கென்றே அரசியலுக்கு வந்திருப்பவர்கள் நுகர்ந்து விட்டுப் போகட்டும்.

ஆனால், ஒன்று, உண்மையை மறைக்கும் அற்பத்தனத்தைத் தமிழ்மக்கள் எந்தக்காலத்திலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அத்தகைய செய்கையுடையவர்கள் உண்மையான தமிழர் ஆகார். இதனை, இன்று, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு நானே தலைவன்—தமிழ் காக்க வந்த தனிப் பெரும் தக்கோன்' என்று தம்பட்டம் அடித்துக் கொள்பவரும், அவரை அண்டி நிற்பவர்களும் உணர்ந்து விட்டால், அது, அவர்களையே குத்திக் குடையும் அம்பாக ஆகிவிடும்,

நெடுஞ்செழியன் அன்றும்-இன்றும்

தமிழ்நாட்டில், இந்தி எதிர்ப்பை முதன் முதலில் தோற்றுவித்தவன் நான்தான் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் திரு, நெடுஞ்செழியன் எம்.ஏ.. எம்.எல்.ஏ., அவர்கள், தம்மால் நடத்தப்பட்ட 'மன்றம்' 1–5–55 இதழில் (10 ஆண்டுகளுக்கு முன்) கீழ்க்கண்டவாறு எழுதினர்.

"தோழர் ஆச்சாரியார் அவர்கள் 1938-ல் இந்தியைக் கட்டாய பாட மாக்குவேன் என்று அறிவித்தபோது, அதனை எதிர்த்து

> ஆச்சாரியாருக்கு முதல் தந்தி அடித்தவர் ஈழத்துச்சிவானந்த அடிகளே ஆவார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அவர்தான் துவக்கி வைத்தார். பிறகுதான், நாவலர், பாரதியார், பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணுத்துரை போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். ஈழத்துச் சிவானந்த அடிகள் முதற் சர்வாதிகாரியாகப் பணி யாற்றிச் சிறை புகுந்தார்.''

என்று எழுதியிருந்தார்கள்.

ஆனல் இன்று, திரு. நெடுஞ்செழியன் அவர்களைப் பார்த்துக் கேட்டால், இந்தப் பேருண்மையைத் துணிந்து கூறுவாரா என்பது ஐயமே! மீறிக் கூறினல், அவரது கட்சியின் தலைவர், ''இதெல்லாம் இப்பொது எதற்கு? பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையானே'' என்று கூறித் தொல்காப்பியக் கொலை செய்யக்கூடும். இந்த அச்சம் திரு. நெடுஞ்செழியனுக்கு மட்டும் விலாக்காகிவிடுமா?

மொழியின் பெயரால் அரசியல் பிழைப்பு

அன்றைய இந்தி எதிர்ப்பில் புனிதத் தன்மையும், உண்மையான மொழிப் பற்றும் இருந்தது. அதனல்தான், எந்தவிதமான செல்வாக்கும் இல்லாத அந்தக் காலத்திலேயே நூற்றுக்கு மேற்பட்ட பெண்களும், ஆயிரத்துக்குமேற்பட்ட ஆண்களுமாக **1247** பேர் கட்டுப்பாட்டுடன் சிறை

செல்லும் ஒரு நல்ல வாய்ப்பு இருந்தது. அந்த அளவுக்கு அன்றைய போராட்டத்தில் உண்மை இருந்தது. அதனால், மக்கள் உறுதியுடன் தங்களைத் தாங்களே அதில் ஈடுபடுத்திக் கொண்டனர். மன்னிப்புக் கேட்பது, 'பரோல்' வேண்டுவது போன்ற விரும்பத்தகாத நிலைகளை அன்றைய போராட்டத்தில் காணமுடியாது.

இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமானால்,

சிறைக்குள் நோய்வாய்ப்பட்டிறந்த *தாலமுத்து*, *நடராசன்* என்ற இரு இளைஞர்கள், மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வீட்டுக்குப்போய் விடவில்லை— வெளியே உள்ள பெரிய மருத்துவமனைக்குத் தங்களை இட்டுச் செல்லும்படி கேட்டுக் கொள்ளவில்லை. அவர்களிடம் மொழிப்பற்று இருந்தது. உண்மைக்கு உழைக்கிறோம் என்ற பெருமிதம அவர்களிடம் காணப் பட்டது.

ஆனால், இன்றைய இந்தி எதிர்ப்பின்முறையே முற்றிலும் வேறானதாகும். போராட்டத்திற்கான இன்றியமையாமையைப் புரிந்து கொள்ளாமல், பிழைப்புக்காக—செய்தித்தாள் விளம்பரத்திற் காகப் போராட்டம் என்ற பெயரில் நடத்தப் படுகிறது. அதிலும், ஒரு பொதுவான மொழிப் போராட்டத்தை ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி நடத்துவது, எப்படி நாட்டுமக்கள் அனைவருக்கும் பொதுவான போராட்டமாக அமைய முடியும்?

இதன் காரணமாகத், தமிழ் மொழியினிடத்து உண்மையான பற்றுக் கொண்டவர்கள்—ஏனைய கட்சிகளிலுள்ள தமிழ் மொழி ஆதரவாளர்கள் கலந்து கொள்ள வழியின்றிப் போகிறது.

அன்றைய போராட்டத்தில் கட்சி–மத, வேறுபாடின்றி எல்லாரும் கலந்து கொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பு இருந்தது.

காங்கிரசிலிருந்த பலர் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ளனர். அவர்களில்,

மறைதிருநாவுக்கரசு (மறைமலை அடிகளாரின் புதல்வர்) குறிப்பிடத்தக்கவர்.

பரவஸ்து இராசகோபாலாச்சாரியார் என்ற வைணவப் பிராமணர் ஒருவர் இந்தி எதிர்ப்பின் சர்வாதிகாரியாக இருந்து சிறை சென்றுள்ளார்.

இன்றைய போராட்டத்தில், "கூடாரத்துக்குள்ளேயே குத்து வெட்டு" என்பதுபோல், அக் கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடு வெளிப்படையாகக் காணப்படுகிறது. சிறை செல்வது கூட முறைபோட்டு நடத்தப்படுகிறது. அதாவது, கட்சியின் அலுவல்கள் கெட்டுப் போகாதபடி பார்த்துக் கொள்வதற்கு, யார் வெளியே இருந்து அவற்றைப் பார்த்துக்கொள்வது? யார் சிறை செல்வது என்ற முறை போட்டுத், தலைவரின் ஆணைக்கும், கட்சியின் அமைப்புக்கும் கட்டுப்பட்டு வேண்டா வெறுப்போடு சிறை செல்லும் கட்டாயம் ஏற்படுகிறது.

எனவேதான், இன்றைய போராட்டம் மொழியைக்காப்பாற்றும் உண்மையானநோக்கத்தோடு நடத்தப்படவில்லை யென்பதும், கட்சியை முன்வைத்து, அது கலையுண்டு—சிதறுண்டு போகாமல் காப்பாற்றவே இந்தி எதிர்ப்பு என்ற பெயரால் போராட்டம் நடத்தப்படுகிறது என்பதும் அரசியல் அறிவு சிறிதளவு தெரிந்தவர்கள் கூடப் புரிந்துக்கொள்ளக் கூடியதாகும்.

இதுவுமன்றி, இன்றைய போராட்டத்தில் சிறிதளவும் புனிதத் தன்மையின்றி, உண்மைக்கு மாருக மொழிப் பற்றற்ற தன்மையில்—தமிழ் பேசும் அனைவரையும் ஒன்ருக அணைத்துக் கொள்ளும் பெருந்தன்மை சிறிதுமின்றி நடத்தப் படுவதால், அது இயல்பாகவே தோற்றுப் போகிறது.

அதோடு, இன்றைய போராட்டம் வெறும் ஏமாற்றுவித்தை என்பதை அரசாங்கம் நன்ருகப் புரிந்து கொண்டதால்தான், இன்று இந்தி ஆட்சிப்பீடம் ஏறும் நிலை பெற்றுள்ளது.

இதுமட்டுமல்ல, போர் முறை தெரியாதவர்கள் எவ்வளவுதான் முரசொலித்து முழக்கமிட்டாலும், போரில் வெற்றி காண்பது வெறுங் கனவுதான்.

ஆட்பலம் ஒன்றுமட்டுமே போரில் வெற்றியைப் பெற்றுத் தந்துவிடாது. போர், ஒரு நல்ல குறிக்கோளுடன், இலட்சிய அடிப்படையில் அமைதல் வேண்டும். அதோடு முறை தெரிந்து போராட்டத்தை நடத்த வேண்டும்.

அவ்வாறு அமையுமானல், ஆயிரம் பேரைத் தனியொருவன் வென்றுவிட முடியும். இது, போர் வரலாற்று நிகழ்ச்சிகள் கற்பிக்கும் பாடம்.

இதில் பாலபாடமே அறியாத அரிச்சுவடியினர், எல்லாம் அறிந்தவர்களைப்போல் எக்காளமிட்டுத் தாவிக் குதிப்பது உண்மையிலேயே பெரிதும் இரங்கி எள்ளி நகையாடக் கூடிய ஒன்றாகும்.

இப்போது நடைபெறும் இந்தி எதிர்ப்புப் போர்முறை, தவருன வழியில் மக்களை இட்டுச் சென்று நடத்தப்படுவதால், அதில் ஈடுபட்டுள்ள சிலருக்கு மட்டும் வாழ்வில் நல்ல வளமும்—வருவாயும், பலருக்கு மிகுதியான தொல்லையும், துன்பமும், பொருள் அழிவும் ஏற்படுவதுமான இரங்கத்தக்க நிலையையே காணமுடிகிறது.

இன்றைய போராட்டத்தின் உள்நோக்கம்

இன்றைய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் உண்மையான மொழிப்பற்றுடன் அதில் பங்குபெற்றிருக்கலாம்.

ஆனால், பலரின்நிலை அப்படியல்ல. அவர்கள் எல்லாரும் தந்நலத்தை—வருவாயை முதலாவதாகவும், கட்சிக்கட்டுப்பாட்டை இரண்டாவதாகவும் கொண்டே அப்போராட்டத்தில் பங்கு கொள்கின்றனர்.

இந்த ஆகாத முறையும் போக்கும் இந்திப் போராட்டம் ஒன்றில்தான் என்று எண்ணிவிட வேண்டாம், அவர்களால் நடத்தப்படும் எந்தப் போராட்டமாயினும், இந்த அடிப்படை நோக்கத்திலேயே நடைபெற்று வருவது வழக்கமாகி விட்டது.

மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு செயலில், தாங்கள் மட்டும் முந்திக் கொண்டு, கருத்துக்கூறிப், போராட்ட முறைகளைத் தங்கள் போக்கிலேயே வகுத்துக்கொண்டு, அது, தங்களுக்கு மட்டுமே உரியது என்ற முறையில் நடத்த முற்பட்டால், தோல்வியைத்தான் காணமுடியும்.

மொழி என்பது அதனைப் பேசும் அனைவருக்கும் பொதுவானதாகும். இதனை ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி, தனக்கே உரித்தாக்கிக் கொண்டு செயல்பட முற்பட்டால், அதனை மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மொழிக்கு மெய்யாகவே கேடுவிளைகிறதென்று அறிந்தால், முதலில் அந்த மொழி பேசும் அனைவரையும் ஒன்றுபடுததும் முதல் வேலையில் ஈடுபட வேண்டும்.

கட்சி நிறம் சிறிதுமின்றி, நேர்மையாக நடந்து, ஒன்றுபட்ட மக்கள் யாரை நம்புகிருர்களோ, அவர்கள் தலைமையில், திட்டமிட்டுப் பொதுநோக்குடன் ஈடுபட வேண்டும். அப்படி ஒரு நல்ல நிலை ஏற்பட்டு, அதில் திறமையைக் காட்டினுல், வெற்றிபெற முடியுமேதவிர, 'எல்லாம் நான்தான்' என்ற இறுமாந்த போக்கில் தொடங்கப் பெறும் போராட்டத்தில், எந்த முறையைக் கையாண்டாலும், அது, இலவுகாத்த கிளியின் கதையாகத்தான் முடியுமேதவிர, வெற்றிக்குச் சிறிதும் இடமில்லை.

மக்களின் உயிர்நாடியான மொழியைக் காக்கும் பெரும்பணியில் ஈடுபடுபவர்கள், அரசியல் வேட்டை ஆடுவதற்குக் கிடைத்துள்ள தங்களின் தற்காலிக (Temporary) செல்வாக்கைக் கருவியாக வைத்துக்கொண்டு போராட்டத்தில் இறங்குவார்களானுல், அது, அவர்களின் அறியாமையை வெளிப்படுத்துவதோடு, சிருர் மணற்சோறு பொங்கி மகிழும் விளையாட்டைப்போன்றதாகவும் முடியும்.

மேலே கூறப்பட்டவைகளைத் தவறென்று அந்த 'நபர்கள்' கூறுவார்களானுல், அவர்களது போராட்ட நோக்கம் முற்றிலும் போலியானது என்பதே உண்மையாகும். அவர்கள், 'தமிழைக் காக்கிருேம்' என்று கூறிக்கொண்டே, தங்கள் வாழ்வை வளப்படுத்தும் தந்நலக்காரர்கள்— பிறரை ஏமாற்றுபவர்கள் என்றுதான் மக்கள் முடிவு செய்வர்.

இன்று, இந்தியை எதிர்ப்பதாகக் கூறுபவர் களிற் பெரும்பாலார் இத்தரமுடையோரே.

அவர்கள் எதிர்பார்ப்பது என்ன?

இன்று, இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்ற பெயரில், கிளர்ச்சி நடத்தும் தி. மு. க. வினர், உண்மையாகவே, அக்கிளர்ச்சியின் வாயிலாக என்ன பயனை எதிர்பார்க்கின்றனர்?

இந்தி ஒழிய வேண்டுமென்பதோ; அல்லது தமிழ் வாழவேண்டும் என்பதோ அவர்களது நோக்கமல்ல. அந்த அளவு அவர்களுக்கு மொழிப்பற்று இருப்பதாக எவரும் எண்ணிவிட வேண்டாம்.

ஏனென்றால், இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுச் சிறை சென்று மீண்டவுடன், அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பையும், பாராட்டையும், ஆடம்பரமான ஊர்வலத்தையும் பார்க்கின்ற போது. அவர்களுக்கு உண்மையான மொழிப் பற்று இருக்கிறதென்று அறிவுடைய எவரும் கூறமாட்டார்கள்.

ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு அதன் பொருட்டுச், சிறையோ, வேறு கொடுமைகளோ ஏற்கநேரிட்டால், அவைகளைப் புன்னகையோடு ஏற்றுத்தான் மேற்கொண்ட போராட்டத்தில் வெற்றிகாணும்வரை. **உண்மையான ஒரு போர் வீரன் இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களை ஒருபோதும் விரும்பமாட்டான்.**

அதிலும், போராட்டத்தின் தலைவனாகவும், தளபதிகளாகவும் இருப்பவர்கள் இந்த ஆடம்பரங்களை அறவே விரும்பமாட்டார்கள்.

ஆனால், இவர்கள், சிறைக்கதவுகள் திறக்கப் பட்டவுடன், தங்களை வரவேற்க எவ்வளவுபேர் வந்திருக்கிறார்கள்? யார் யார்—குறிப்பிடத்தக்கவர்கள் வந்திருக்கிறார்கள்? எத்தனை மாலைகள்? எவ்வளவு தொகைக்குப் பணமுடிப்பு? தங்களுக்கு அளிக்கப் படும் கேடயம் வெள்ளியாலானதா? தங்கமுலாம் பூசப் பெற்றதா? ஊர்வலம் பல்லக்கிலா? தேரிலா? ஊர்வலத்தில், யானை, குதிரை, உண்டா? செய்தித் தாள் குறிப்பெடுப்பவர்களும் புகைப்படம் எடுப்பவர் களும் வந்துள்ளனரா? *என்ற விவரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்களேயன்றித், தாங்கள் ஏற்றபணியில் வெற்றியா? தோல்வியா? என்று எண்ணிக்கூடப் பார்க்க நினைவும் நேரமும் இருப்பதில்லை.*

போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தொண்டன் இவ்விதம் எண்ணி எதிர்பார்த்தால், அது, அவனுக்கு இயற்கையாக ஏற்படக்கூடியதுதான் என்று கருதலாம். என்றாலும், உண்மையான மொழிப்பற்றுள்ள ஒரு தொண்டன் கூட இந்த அற்ப ஆடம்பரங்களை விரும்பவே மாட்டான்.

ஆனால், இன்று நடப்பதென்ன? 'தமிழ் காக்கவந்த தனிப்பெருந் தலைவர்கள் நாங்கள்தான்' என்று பறைசாற்றிக்

கொள்ளும் 'மேதை'கள் அல்லவா, நான் முந்தி, நீ முந்தி என்று இந்த ஆகாத—தேவையற்ற—விரும்பத்தகாத வீண் ஆடம்பரங்களை விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள்!

வெற்றிகண்ட பின் மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டிய விருதுகளைத் ***தோல்வியின் அறிகுறிகள் தோன்றுகின்ற*** நேரத்தில், 'இதுதான் தக்க சமயம், இனியும் தாமதிப்பது நல்லதல்ல' என்று எண்ணி விழுந்தடித்துக்கொண்டு, விருதுகளையும், பரிசுகளையும் பணமுடிப்புக்களையும் விரும்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

ஐம்பதுக்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும், எட்டுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும், பல நகராட்சி மன்றங்களையும், பஞ்சாயத்துக்களையும் தன்னிடம் வைத்துக் கொண்டுள்ள ஒரு 'அரசியல்' கட்சிதான், தமிழ் நாட்டில் இந்தியை எதிர்க்கின்ற தென்பதை அறிந்தும், தில்லி அரசு இவர்களின் இந்தி எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், இந்தியைத் திணிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிற தென்றால், அது இங்கு இந்தியை எதிர்ப்பவர்களின் உள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு விட்டதென்பதைத்தானே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இவர்கள்-தி. மு. க. வினர் இந்தியை எதிர்க்கவில்லை—காங்கிரசை எதிர்க்கின்றனர். அதுவும் வெறும் பதவிகளுக்காகக் காங்கிரசை எதிர்க்கின்றனர்.

இவர்கள் தமிழை வளர்க்கவில்லை-தங்களுக்குக் கிடைத்துள்ள செல்வாக்குச் சிதையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகவே, தாங்கள் தமிழுக்காகப் போராடுவதாகப் பொதுமக்களிடம் கூறிவருகிருர்கள் என்பதும் தில்லி அரசுக்கு நன்ருகப் புரிந்துவிட்டது.

எனவேதான், இந்தியை ஆட்சிமொழியாக்கும் பணியில் சிறிதும் தயக்கமின்றி, மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

பெரியாரின் இந்தி எதிர்ப்பு!

இது நிற்க பெரியார் இராமசாமி அவர்களுக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை, பெரியார் இராமசாமி அவர்களுக்கும் இந்தி எதிர்ப்புக்கும் எவ்விதமான நேரடித் தொடர்பும் இல்லை என்பதைத் தெளிவாக அறியலாம்.

அதாவது, சென்னை மாநிலக் காங்கிரசு அமைச்சர்கள் 1939-ல் பதவியிலிருந்து விலகியதும், பெரியார் இராமசாமி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில்,

> **''இந்தி எதிர்ப்புத் தீவிரக் கிளர்ச்சி தற்கால சாந்தியாகச் சிறிது நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது''**
>
> **— ஈ. வெ. இராமசாமி**

என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததோடு, கட்டாய இந்தி நீங்கு முன்னர், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஏன் நிறுத்த வேண்டுமென்று கேட்டதற்குப் பெரியார் இராமசாமி அவர்கள் என்ன கூறினர் தெரியுமா?

> "நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, காங்கிரசு மந்திரிகளுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்பதற்காக நான் அதுபோல் பயன் படுத்திக் கொண்டேனே யொழிய, உண்மையிலேயே எனக்கு இந்தி கட்டாயமாக்கப் படுவதைப் பற்றியோ, அதனல் தமிழ் அழிந்து விடும் என்பதுபற்றியோ கவலையில்லை"

என்று கூறியிருக்கிருர்.

இதனை அறிந்த நான், உடனே ஒரு அறிக்கையை வெளியிட்டு, அதில், பெரியார் இராமசாமி அவர்களுக்கு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்தும் உரிமை கிடையாதென்றும், காங்கிரசு அமைச்சர்கள் இடைக்கால ஏற்பாடாகப் பதவியிலிருந்து விலகினலும், அவர்களால் புகுத்தப் பட்ட கட்டாய இந்தி நீக்கப்படவில்லை; ஆதலால் இந்தி எதிர்ப்பு மறியல் தொடர்ந்து கவர்னர் மாளிகை முன் நடைபெறும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அந்த அறிக்கை, "Hindu," "Mail" ஆகிய இதழ்களில் 4-11-39-ல் வெளிவந்ததை அப்படியே இங்கு தருகிறேன்.

Anti - Hindustani Agitation.

Madras, Nov. 4.'39

Mr. Elathu Sivananda Adigal founder of the anti-Hindustani agitation, in a statement sent to us, says that he does not think that Mr. E. V. Ramaswami Naicker has any right to issue the statement he issued a few days back in connection with the agitation "as he was not elected a leader of the agitation by the Anti-Hindi Committee. 'Mr. Adigal states that serveral times when he asked certain Justice Party leaders to take part in the agitation, they refused. He adds that "The agitation and picketing will not cease-temporarily or permanently, unless the G. O. regarding compulsory Hindi is Cancelled."

On behalf of the women members of the anti-Hindustani movement, a Communication has been addressed by Srimathi Dharmambal to the Government in which they state that the G O regarding Compulsory Hindi is quite "against the will of the public" and ask for its cancellation immediately. They inform the Government that they are prepared to picket the Governor's bungalow (Government House) if the GO. is not cancelled in a week's time.

"HINDU"

Anti Hindi Picketing Not to be Stopped

Madras, Nov., 4 '39.

Mr. Elathu Sivananda Adigal, originator of the anti-Hindi agitation, in a statement, disputes the right of Mr. E. V. Ramaswami Naicker, Leader of the Justice Party, to suspend, temporarily, the agitation against Hindi and informs the public and the Government that the agitation and picketing will not be stopped unless the Government Order making Hindi a Compulsory subject of study in schools is cancelled.

Dr. (Mrs) Dharmambal, on behalf of the lady members of the anti-Hindi movement states that if the Government order is not cancelled within a week they will picket Government House.

— " *MAIL* "

இந்தி அறிக்கையைக் கண்ணுற்ற கவர்னர் அவர்கள், செட்டி நாட்டரசர் உயர்திரு. முத்தய்யா அவர்களை அழைத்து,

" என்னுடைய மாளிகை முன் இந்தி எதிர்ப்பு மறியல் நடத்த இருப்பதாக ஒரு அறிக்கை வந்திருக்கிறது. இதனைத் தாங்கள் எப்படியாவது தடுத்தாக வேண்டும்.

நான் தில்லிக்குச் சென்று கட்டாய இந்தி நீக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன்."

என்று கூறவே, செட்டி நாட்டரசர் என்னையும் சண்முகானந்த அடிகளையும் அடையாறிலுள்ள தம்முடைய மாளிகைக்கு அழைத்து, கவர்னர் அளித்துள்ள உறுதிமொழியைக் கூறினார்கள்.

கவர்னர் மாளிகை முன் மறியல் செய்யப் போவதாகப் பெண்கள் சார்பில் அறிக்கை வெளியிட்டிருந்த டாக்டர் தருமாம்பாள் அவர்களிடம் இதுபற்றிக் கலந்து பேசினோம். அவர்களும்,

> "சரி, நிலைமை இதுவானால், சிறிது நாட்களுக்கு மறியலை நிறுத்தித்தான் பார்ப்போமே"

என்று கூறினார்கள்.

இதன்படி மறியல் நிறுத்தப்பட்டது.

மறியல் நின்ற சில நாட்களுக்கெல்லாம் கவர்னர் அவர்களின் தலையீட்டால்,

> "கட்டாய இந்தி நீக்கப்பட்டு விரும்புபவர்கள் மட்டும் படிக்கலாம்"

என்று தில்லி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நல்ல செய்தியை வரவேற்றுக் கவர்னர் அவர்களைப் பாராட்டியதோடு தமிழ்நாட்டில், தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக்குதல் வேண்டுமென்றும் ஒரு தந்தி வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

MADRAS: 22—2—'40

Mr. E, Sivananda Adigal wires from Vaniyambadi (under date February 22) to say that he is grateful to H. E. The Governer for cancelling the Government order making Hindi a compulsory subject in schools and requesting the Madras Government to make Tamil a Compulsory subject in all schools.

- *'HINDU'*

எனவே, இதுகாறும் கூறியது கொண்டு, பெரியார் இராமசாமி அவர்களுக்கும் இந்தி எதிர்ப்புக்கும் எந்தவிதமான நேரடித் தொடர்பும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், இன்று இந்தியை எதிர்ப்பவர்களிடமும் உண்மையான மொழிப்பற்று இல்லை என்பதை எடுத்துக் காட்டவும், குருஎவ்வழி, சீடர்களும் அவ்வழிதான் என்பதைப் பொதுமக்கள் உணரவுமான ஒரு நல்ல வாய்ப்பினை உண்டாக்கவுமேயாகும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தான் தோல்வியைத் தேடிப்பெற்றனர் என்று எண்ணி விட வேண்டாம்.

தி. மு. க. வினரால் மேற்கொள்ளப்பட்ட எல்லாப் போராட்டங்களுமே, பொது நோக்கோடு,—மக்களின் நன்மையைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், கட்சியின் வளர்ச்சிக்கும், அக்

கட்சியிலுள்ள குறிப்பிட்ட ஒரு சிலருக்குக் கிடைத்துள்ள செல்வாக்கை நிலைபெறச் செய்யவும், வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் பயன் படுத்தப் பட்டன—படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

டால்மியாபுரம் கல்லக்குடியாகவில்லை.

புகைவண்டிகள் ஓடாமல் நிற்கவில்லை.

புகைவண்டி நிலையங்களிலுள்ள இந்திப் பெயர்கள் எடுபடவில்லை.

விலைவாசி உயர்வு குறையவில்லை.

சட்டப்பிரிவை எரித்தும், மாணவர்களின் படிப்பைக் கெடுத்தும் இந்தி ஆட்சிமொழியாவதைத் தடுக்க முடியவில்லை.

இப்படி, எந்தப் போராட்டத்திலும் வெற்றியைக் காண முடியவில்லை, என்பது மட்டுமல்ல;

எந்தப் போராட்டத்தையும், அதில் வெற்றி கிட்டும் வரை நடத்தவில்லை—நடத்தும் தகுதியும், திறமையும் அவர்களிடம் கிடையாது.

எடுத்துக்கொண்ட எந்தப் போரட்டத்திலும் வெற்றிபெற வேண்டுமென்ற குறிக்கோளே அவர்களுக்கு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

அவ்வப்போது, பொதுமக்கள் தங்களைத் திரும்பிப்பார்க்கிருர்களா? தங்கள் பக்கம் நிற்கும் அறிகுறிகள் அவர்களிடம் காணப்படுகின்றனவா? என்பனவற்றை அறியவும், அதனுல்,

தேர்தலில் எத்தனை இடங்களைப் பிடிக்கலாம் என்ற கணக்குப் போடவுமே, அவர்கள் போராட்டங்கள் என்ற பெயரால் அரசியல் ஆரூடங்கள் கணிக்கின்றனர்.

இதுவுமன்றி, ஆளுங்கட்சியைத் தோற்கடித்து, அந்த இடத்தை இவர்கள் பிடித்துக் கொள்ள வேண்டுமென்ற பதவி ஆசையால் உந்தப்பட்டுப், பொதுமக்களைத் தங்கள் பக்கம் இழுப்பதற்கு இந்தப் போராட்டங்களைப் பயன்படுத்துகின்றனர்.

மற்று, இவர்களுக்கு, ஆளுங்கட்சியில் காணப்படுங் குறைகளை எடுத்துக்காட்டித்—தவறுகளைத் திருத்தி, நல்ல ஒரு எதிர்க்கட்சியாக இருந்து மக்களுக்குப் பொதுவான நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற பரந்த நோக்கமும் பண்பும் சிறிதும் கிடையாது.

"தேர்தலில் ஆளுங்கட்சியைத் தோற்கடிப்பதே எங்கள் குறிக்கோள்" என்ற முறையில் தான் இவர்களின் பேச்சும் எழுத்தும் இருக்கக் காண்கிறோம்.

ஒரு நாட்டை ஆள்வதைப் பார்க்கினும், அந்த நாட்டை ஆளுங்கட்சிக்கு அறிவுரையும், ஆய்வுரையுங் கூறி, அவர்கள் வாயிலாக நாட்டு மக்களுக்கு நல்ல பல நன்மைகளைச் செய்யத் தூண்டுவதே சிறந்

ததும்—தேவையானதும்—பாராட்டக் கூடியதுமாகும் என்பதனை உணரும் நல்லறிஞர்களை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் பொதுமக்களிடம் தான் உள்ளது.

பலகாலமாக, அதாவது இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகவே அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடி, வெற்றி கண்ட கட்சியின் கையில் இப்பொழுது ஆளும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் ஆளுகையில் சிலதவறுகள் இருக்கலாம்! அப்படித் தவறுகள் இருந்தால், அவற்றைத் திருத்துவது அந்தந்த மாநிலங்களிலுள்ள மற்றக் கட்சிகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

இதற்காகத்தான் ஆளுங்கட்சிக்கு ஒரு நல்ல எதிர்க்கட்சி இருத்தல் வேண்டுமென்று அரசியலறிவு படைத்தவர்கள் கூறுகின்றனர்.

இப்படி, ஒரு நல்ல எதிர்க்கட்சி ஆளுங் கட்சிக்குத் துணையாக அமைந்து விட்டால், குறைகளைந்து, நிறைபேணி நாட்டுக்கு நல்லபல நன்மைகளைச் செய்ய ஆளுங்கட்சியால் முடியும்.

இங்ஙனமன்றி, ஆளுங்கட்சியைத் தோற்கடிப்பது தான் எங்கள் குறிக்கோளும் நோக்கமுமாகும் என்ற போக்கில் நாட்டை வலம்வரும் எந்தக் கட்சியாலும், மக்களுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்துவிட முடியாது.

இந்தப் பேருண்மையைப் பொதுமக்கள் உணரும் காலம் வரும் வரையில்—வரும்படி செய்யப்படும் வரையில், நாம் இப்படிப்பட்ட அரைகுறை அரசியல் ஆருடக்காரர்களை அடிக்கடி சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு இரங்கத்தக்க நிலையைத் தான் காணமுடியும்.

அன்று நடந்ததை 'இவர்கள்' அறிவரோ?

இன்றைய இந்தி எதிர்ப்பாளருக்கு, அதாவது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களுக்கு, இந்தி எதிர்ப்பு முதலில், எதற்காக—எப்படி—யாரால் தொடங்கப் பெற்றதென்ற உண்மைகளே தெரியாது.

பொதுவாக, இன்றுள்ள இளைஞர்கள் பலருக்கும், செய்தித்தாள் துறையில் இருப்பவர்களுக்கும், வேறுபல அரசியல் கட்சிகளில் இருப்பவர்களுக்கும் இந்த உண்மை சரியாகத் தெரியாது.

தெரியாதென்றால், இவர்கள்—தி. மு. க. வினர்—குறிப்பாக அதன் தலைவர்—அன்றைய இந்தி எதிர்ப்பில் கலந்துகொண்டு சிறை சென்றவர்-வேண்டுமென்றே இந்த உண்மையைப் பொதுமக்களிடம் கூறாது மறைத்து வருகின்றார்.

1938-ல் இந்தி எதிர்ப்பு நடைபெற்றபோது, இன்றைய இந்தி எதிர்ப்பாளர்களிற்பலர், கருவில் கூட உருவாகாதவர்கள், சிலர் மணல்வீடு கட்டி விளையாடும் பருவத்தில் இருந்தவர்கள், ஒரு சிலர் பள்ளிக்கூட மாணவர்களாக இருந்தவர்கள்.

வேறு சிலர் அன்றைய இந்தி எதிர்ப்பில் பங்கு கொண்டவர்களும், இந்தி எதிர்ப்பைப் பார்த்துக் கேலி செய்தவர்களும், வறிதே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தவர்களுமாவர்.

அன்றைய இந்தி எதிர்ப்பில் பங்குகொண்ட இந்தச் சிலர் இருக்கிறார்களே! இவர்களுக்கு, அன்றைய இந்தி எதிர்ப்பின் வரலாற்றை. இன்று இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பிற பொதுமக்களுக்கும் எடுத்து விளக்கிக் கூறும் மனிதப்பண்பு தங்களிடம் இல்லை என்று கூறும் அளவுக்கு இவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? விளக்கம் தேவையா?

இன்று வளர்ந்துள்ள நிலையில், அந்தப் பேருண்மையை எடுத்து, இன்றைய 'புதுமுகங்'களிடம் விளக்கிக் கூறினால், இன்று தங்களுக்குக் கிடைத்துள்ள இரவல் செல்வாக்கும் புகழும் போய்விடுமே என்று அச்சப்படுகிறார்கள்.

இல்லையேல், இன்றைய இந்தி எதிர்ப்புத் தலைவர்—1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பை முழுவதும் அறிந்தவர்—அந்த உண்மையைக் கூறியிருக்கமாட்டாரா?

கூறினால், குட்டு வெளிப்பட்டுவிடுமே என்ற கோழைத்தனம் கலந்த அச்சத்தைத் தவிர வேறு என்ன?

1938-ல், முதன் முதல் இந்தி எதிர்ப்பைத் தோற்றுவித்தது கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகள் தான் என்ற உண்மையை கூறினால், இன்றைய *இந்தி எதிர்ப்பாளர்களிற் சிலராவது,*

ஓ! அப்படியா? யாரந்த ஈழத்துச் சிவானந்த அடிகள்? இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் 'திராவிடநாடு' அலுவலகத்தில் இருந்து, அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று, நடத்தி வந்தாரே ஒரு அடிகள்! அந்த ஈழத்துச் சிவானந்த அடிகளா? "திராவிட நாடு' அலுவலகப் பொறுப்பை மட்டுமல்ல, எங்கள் குடும்பப் பொறுப்பு முழுவதையும் கண்ணுங் கருத்து மாகக் கவனித்து வருபவர் அடிகள்தான்" என்று திருவாட்டி. இராணி அண்ணாத்துரை அவர்களால் பாராட்டப் பெற்ற அந்த அடிகளா? "அடிகள் எங்கள் குடும்பத்தில் ஒருவர்" என்று திரு. அண்ணாத்துரை அவர்களால் அழைக்கப்பட்டாரே, அந்த அடிகளா? அல்லது அந்தச் சிவானந்த அடிகள் இப்போது இல்லையா? இருந்தால் இப்போது நடைபெறும் இந்தி எதிர்ப்பில் ஏன் கலந்து கொள்ளவில்லை? அவரை அழைக்கவில்லையா? இந்தி ஆதரவாளராக மாறிவிட்டாரா? அல்லது மறைந்தே போய்விட்டாரா?

என்று கேட்டிருப்பார்கள்.

ஆனால், இப்படிக் கேட்கும் அளவுக்குக்கூட இன்றைய இந்தி எதிர்ப்பாளர்களிடம் நேர்மையும் துணிவும் இல்லை என்பதை அண்மையில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியால் அறியலாம்.

3—9—64-ல் சென்னையில், எனக்குப் பொன்னாடை போர்த்தி ஐயாயிரம் வெண் பொற் காசுகள் பணமுடிப்பாகத் தரப்பட்டதாக ஒரு சடங்கு நடைபெற்றதல்லவா?

அதற்கு விளக்கந் தந்து, எனக்கென்று தந்த பணம் எப்படி எப்படியெல்லாம் செலவாயிற்று என்ற விபரங்களைக் குறிப்பிட்டு 4–9–64-ல் ஒரு அறிக்கையை அச்சிட்டு, அதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள பொறுப்பானவர்கள் அனைவருக்கும், தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் செய்தித் தாள்கள் அனைத்திற்கும் அனுப்பி வைத்தேன்.

எனக்கென்று தந்த பணத்தில், ரூபா 1200-00 தான் எனக்குப் பயன்பட்டதென்றும், எஞ்சியுள்ள மூவாயிரத்தெண்ணூறும் 'திராவிடநாடு' நிர்வாகச் செலவுக்காக அவ்வப்போது வாங்கிய கடனுக்கும், 1962-ல் காஞ்சித் தொகுதியில் நடைபெற்ற தேர்தலுக்காக வாங்கிய கடனுக்கும் நேர் செய்யப்பட்டதென்பதையும் அந்த அறிக்கையில் விளக்கமாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டிருந் தேன்.

ஆனால், கழகத்திலுள்ள எவரும் அதற்குப் பொறுப்பான தலைவரிடமோ, நிதி அளிப்பு விழாக் குழுவினரிடமோ விவரம் கேட்கவில்லை—கேட்கும் துணிவைப் பெறவில்லையென்றால்,

> எப்பொழுதோ—25 ஆண்டுகளுக்கு முன் நடை பெற்ற இந்தி எதிர்ப்பு நிகழ்ச்சிகளைப் பற்றியா கேட்கப் போகிறார்கள்?

எங்களுக்கு வேண்டியது, புகழும், செல் வாக்கும், வருவாயும்தான் என்ற போக்கில் இருப் பவர்களிடம் எங்ஙனம் நேர்மையையும் ஒழுங்கை யும் எதிர்பார்க்க முடியும்!

என்றாலும், பொதுமக்கள் இவைகளை யெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற் காகவும்,

> முப்பது ஆண்டுகளாக நான் ஆற்றிய உழைப் பால் உயர்ந்தவர்களின் இதயமற்ற—மனிதப் பண்பற்ற கொடுமையைப் பொதுமக்கள் புரிந்து கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தாலும், அதன் தலைவராலும் திக்கற்ற வனாகத் தெருவில் விடப்பட்ட எனக்கு—அறுபத் தெட்டு ஆண்டுகளைக் கடந்து எஞ்சி நிற்கும் சிறிதுகால வாழ்க்கையை நடத்திச்செல்ல இயலாத நிலைபெற்றுள்ள எனக்கு—ஏணியாகத்-தோணியாகக்—கருவேப்பிலையாகப் பயன் படுத்தப்பட்டுச் செய்வதறியாது கலங்கிநிற்கும் நிலைபெற்றுள்ள எனக்கு

ஓரளவுக்காவது ஆறுதலும் அமைதியும் உண்டா கும் என்பதற்காகவுமே இதனை எழுதுகிறேன்.

வேறு, யாதாயினும் பயன்கருதியோ, அல்லது எனக்குக் கிடைக்கவேண்டிய புகழையும் செல்வாக்கையும் யாரோ தட்டிப் பறித்துக் கொண்டார்களே என்ற காழ்ப்பாலோ இதனை எழுதுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம்.

நான் நினைத்திருந்தால்—விரும்பியிருந்தால், அல்லது, என்னுடன் நெருங்கிப் பழகியவர்கள் சொன்னதைக் கேட்டு, அதன்படி நடந்திருந்தால்,

> நானும் ஓரளவுக்குச் செல்வத்தில் புரண்டு; வறுமை, தொல்லை, துன்பம் என்ற இன்னல்களிலிருந்து விடுபட்டு-வசதியான வாழ்க்கையில் திளைத்திருப்பேன்.

ஆனால், தந்நலம் ஒழித்துப் பிறர்நலம்-பொது நலம் பேணுவதையே குறிக்கோளாகவும், கொள்கையாகவும் கொண்டு பணியாற்றிய என்னால் அந்த 'வாய்ப்பினை'ப் பெற முடியவில்லை என்பதோடு, பொதுவாழ்வில் உண்மையாகவே ஈடுபட்டுள்ள எவருமே இந்த ஆகாத—விரும்பத்தகாத போக்கினை விரும்பமாட்டார்கள்.

அதிலும், அரசியல் வாழ்வுக்குத் தங்களை ஒப்படைத்துப் பொதுத்தொண்டு புரியும் எவரும் பணத்தின்மீது குறிவைக்கவே மாட்டார்கள்

கடந்த முப்பதாண்டுப் பொதுவாழ்வில் என் கைக்கு வந்த பணத்தில் நூற்றில் ஒரு பாகத்தைக் கூட நான் எனக்கென்று சேர்த்துவைக்கவில்லை.

அரசியலும் பொதுவாழ்வும் பணம் ஈட்டும் துறைகள் என்று கருதி, அதற்காக அவைகளைப் பயன்படுத்திப் பொதுமக்களை ஏமாற்றுபவர் களைத் தவிர, நேர்மையும், தூய உள்ளமும், நல்ல பண்பும் உள்ள எவரும் இத்தகைய இழிசெயல் களுக்குத்தங்களை ஆளாக்கிக்கொள்ளமாட்டார்கள்

எனவே, இந்த, நடு இரவில் குடை பிடிப்பவர் களின் தொகை குறைந்து, குறைந்து, அருகி, இல்லாதொழியும் நாள் வந்தே தீரும் என்ற நம்பிக்கையுடன் பணி புரிவோமாக.

இந்தி எதிர்ப்பின் உண்மையான வரலாற் றைப் பற்றியும், அதனைத் தோற்றுவித்த என்னைப் பற்றியும் பொதுமக்கள் அறிந்து உண்மையைப் புரிந்து கொண்டால், அதுவே, நொந்த நிலையில் உள்ள எனக்கு ஆறுதல் அளிக்கும்.

அதுவுமன்றி, மக்களுக்குப் பயன்தரக் கூடிய பொதுத் தொண்டைச் செய்பவன், அத்தொண்டி னால், தனக்குப் புகழும், பெருமையும் கிடைக்க வேண்டுமென்று விரும்புவானானால், அந்தத் தொண்டு உண்மையான தந்நலமற்ற தொண் டாகாது என்பதனை நன்குணரக் கூடியவர்களில் நானும் ஒருவன்.

எனவேதான் 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பின் பயனைக்,

கட்டாய இந்தி ஒழிந்து, அது, விருப்பபாடமாக ஆக்கப்பட்டது.

ஆனால், இன்று நடைபெறும் இந்தி எதிர்ப்பில் புனிதமும், நேர்மையும், ஒழுங்கும், குறிக்கோளும் இல்லாததால், அது வெற்றிபெற முடியாமற் போனதோடு, அப்போராட்டத்தை நடத்தியவர்களே அதனைக் கைவிடவேண்டிய இரங்கத்தக்க நிலையும் ஏற்பட்டுவிட்டது என்பதைக்கூறி இதனை முடிக்கிறேன்.

எனதருமைத் தமிழ்நாடே! பழமையில் முதுமை பெற்று, என்றும் அழியா நிலையிலுள்ள நாகரிகத்திற்கும் நற்பண்புக்கும் உறைவிடமே!

போலித் தலைவர்களால் உனக்கேற்பட்ட மாசைத் துடைத்துக்கொள்!

எனதருமைத் தமிழ் மக்களே!

தந்நலமற்ற தொண்டு புரிபவர்களுக்கு எனக்கேற்பட்டது போன்ற ஒரு இரங்கத்தக்க நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

வணக்கம்.

புனிதப்போர்

'புனிதப்போர்' என்ற தலைப்பில், 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பின் முழு வரலாறும் அடங்கிய நூல் ஒன்று எழுதி முடித்திருக்கிறேன்.

இந்நூல், பெரிய அளவில்—500 பக்கங்களுக்குமேல் இருக்குமாதலால், அதனை அச்சிட்டு வெளியிட முடியாத நிலையில் இருக்கிறேன்.

பொதுமக்களின் பேராதரவும் பொருளுதவியும் கிடைத்தால், விரைவில் அச்சிட்டு வெளியிடலாம் என்றிருக்கிறேன்.

வரலாற்றுண்மை வாய்ந்த இந்நூல், தமிழ் மொழிக்கு உள்ள இடுக்கணைத்துடைக்க எழுந்த போராட்டம் பற்றியதாகையால், தமிழ் பேசும் அனைவரும் படித்தறிய வேண்டியதாகும்.

எனவே, இந்நூலை அச்சிடும் செலவுக்கு அன்பளிப்பு வழங்கும் அன்பர்கள் கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி ஆதரிக்குமாறு பெரிதும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்

ஈழத்து அடிகள்,
56, வரகுவாசல் தெரு,
சின்னக் காஞ்சிபுரம்,

ஜெயவேல் அச்சகம், (போன்: 251) காஞ்சிபுரம்.